# வழிபாடும் வழிபாட்டுப் பயனும்

முனைவர் சி.தேவி, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
devi-tam@sfrcollege.edu.in - 9442436396

DOI 10.5281/zenodo.10652851

Abstract

Worship appears to people in three stages: “fear”, “love”, “grace”. In this, worship of fear is done by passion, worship of love by wisdom, and worship of grace by wisdom. The worships of common people who do not understand high religious values are based on fear. Hence minor deity worship and ghost worship are practiced. Then those who bow down and worship are worshipers of slaves. These are the people who live with the aim of Makadhonde Mahesan Dondu. Those who follow Arul Norami are enlightened. Their worship is of two types: subjective worship and objective worship.

Keywords : Worship - Common peole - Wisdom

மனித மனதைப் பக்குவப்படுத்த தோன்றிய அமைப்பு முறையே சமயம். சிவத்தை மூலக்கடவுளாகக் கொண்ட சமயம் சைவம். சைவசித்தாந்தம் இறைவழிபாடு மூன்று வகை அடிப்படைகளைக் கொண்டது. வழிபடுதல் எனும் சொல் பின்பற்றுதல், வணங்குதல் எனும் பொருள் தருவதாக அமைகிறது.

வழிபாடு மக்களிடம் “அச்சம்“, “அன்பு”, ”அருள்”, எனும் மூன்று நிலைகளில் தோன்றுகிறது. இதில் அச்ச வழிபாடு என்பது பாசஞானத்தாலும், அன்பு வழிபாடு பசுஞானத்தாலும், அருள்வழிபாடு பதிஞானத்தாலும் நிகழ்கின்றது. உயரிய சமயநெறிகளை உணராத எளிய மக்களின் வழிபாடுகள் அச்சம் சார்ந்து அமைகின்றன. ஆகையினால் சிறுதெய்வ வழிபாடும் ஆவி வழிபாடும் கைக்கொள்ளப்படுகிறது. அதன்பின் வழிநின்று வழிபாடு செய்பவர்கள் அடியவர் வழிபாடு செய்வோர் ஆவர். இவர்கள் மக்கட்தொண்டே

மகேசன் தொண்டு என்பதை நோக்கமாகக் கொண்டு வாழ்பவர்கள் ஆவர். அருள்நெறியைப் பின்பற்றுபவர்கள் பதிஞானம் அடைந்தவர்கள் ஆவர். இவர்களின் வழிபாடு அகநிலை வழிபாடு புறநிலை வழிபாடு என்ற இரு வகையில் அமையும்.

**அகநிலை வழிபாடு**

அகநிலை வழிபாடு என்பது தனக்கான வழிபாடாக அமைகின்றது. இது அன்பு, அருள் என்ற இரண்டு தன்மைகளை அடிப்படையாகக் கொண்டமைகிறது. அகநிலை வழிபாடு அருஉரு, அருவம், அருள்வெளி என்ற முத்திறப்படி முறைகளைப் பெற்றமைகிறது. அகநிலைவழிபாடே அருள்வழியில் நிற்பதால் முழுமைபெற்ற வழிபாடாகத் திகழ்கிறது. இவ்வழிபாட்டு முறையே முக்திநெறி வழிபாடாக அமைகின்றது.

மனம் ஒன்றிச்செய்யாத வழிபாடு வெற்றுச் சடங்காக, பயனற்ற வழிபாடாக அமைகின்றது. என்பதை,

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும் யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய்? வினை தீர்த்தவனே!"1

என்ற தனது பாடலின் வழி பட்டினத்தடிகள் வலியுறுத்தியுள்ளார். அகம் பதியாத வழிபாடு வெறுமையான வழிபாடு என்று சிவவாக்கியரும், உள்ளமே பெருங்கோயில் என்று திருமூலரும் அகநிலைவழிபாட்டின் சிறப்பினை எடுத்தியம்பியுள்ளனர். இறைவன் மலரில் மனம் போலவும், தீயில் தெறலாகவும் விரவிக்காணப்படுபவன். அவனை புறநிலையில் தேடி அடைதலென்பது முடியாத்தன்மையாகும். எனவே அகநிலையில் அவனைத்தேடி அடையலாம்.

"மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும்வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்பொறை எனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதிவிளையு மன்றே" 2

என்று அப்பர் பெருமகனார் அகத்தேடல் பாசத்தில் தொடங்கி,பசுவில் மூழ்கி, பதியை அடையும் நிறைவு நிலையினை விளக்கிச்சென்றுள்ளார்.

**புறநிலை வழிபாடு**

புறநிலை வழிபாடு என்பது உலக உயிர்கள் உய்வு பெற உதவும் நோக்கில் அமைவதாகும். இது திருஉருவுங்கள்,திருமறைகள்,சார்ந்த வழிபாடாகத் திகழ்கின்றது. அருளை அடிப்படையாகக் கொண்டே இயங்கும் ஆத்மஞானிகள் இயற்றும் புறவழிபாடு உலகு உயர்வு பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்தியம்புகின்றனர். பிறர் செய்யும் வழிபாடு வெற்றுச்சடங்காகவே அமைகின்றது.

" பூசை பூசை என்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுன்ன தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதி பூசை கொண்டதோ அனாதி பூசை கொண்டதோ
ஏது பூசை கொண்டதோ இன்னதென்று இயம்புமே"3

என்ற பாடல் மூலம் சிவவாக்கியர் நமது சடங்கு சார்ந்து பொருளற்ற முறையில் நடைபெறும் வழிபாட்டு முறைகளைச் சாடியுள்ளார். அத்தோடு நிற்காமல்

"ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே" 4

என்று அகநிலை வழிபாடு நல்கும் பலன் மற்றும் சிறப்பினை சிவவாக்கியர் சுட்டியுள்ளார்.

புற வழிபாடு சடங்குகள் போல் தெரிந்தாலும், இவ்வழிபாட்டு முறையினைத் தொடர்ந்து கைக்கொள்பவரின் உள்ளம் இறைச்சிந்தனையில் ஆழ்ந்து அகவழிபாட்டில் சென்று நிறைவுபெறுகிறது. இந்த அகவழிபாட்டில் ஆழ்ந்தவர்கள் எண்பொருளிலும் ஏன் பார்க்கும் பொருளெல்லாம் இறைவனைக் காணும் சிந்தனை நிலைக்குச்செல்கிறார்கள். புறவழிபாடு காட்சியின்பத்தில் மூழ்கிய மக்களுக்கு சமயப்பற்றினை வலியுறுத்தும் காரணியாகவும் சமயச்சிந்தனையினை வளர்ப்பதாகவும் அமைகின்றது. எனவே மக்களின் மனதில் இறைச்சிந்தனையை வளர்க்கும் வகையில் சமயக்குரவர்கள் தங்கள் திருவடி நோவத் தலந்தோறும் நடந்து சென்று திருமூர்த்தங்களைப் பாடிப்பரவசமடைந்தனர்.

**வழிபாட்டு நெறி**

இறைவழிபாடு மனம் மொழி மெய்கள் அனைத்தும் ஒருமித்த நிலையில் இருத்தல் சாலச்சிறந்த்து. சைவ சித்தாந்தத்தின் அடிப்படையில் இறைவனை வழிபாடு செய்யும் நெறி என்பது குரு மரபு வழிபாடு, லிங்கவழிபாடு, சங்கமவழிபாடு என்ற மூன்று வகையாக இனங்காணப்பட்டுள்ளது. இதை மேலும் விளக்கிக்கூறுமிடத்து குரு வழிபாடு,இறைவழிபாடு, அடியார் வழிபாடு என்றுரைப்பர். இறைவழிபாட்டு நெறியினை எடுத்துரைக்கும் பொழுது காரைக்காலம்மையார் அடியவர் புகழ் பாடுதலை முதன்மைப்படுத்திக்கூறியுள்ளார். அதே நேரம் இறையுணர்வுக்கும் வழிபாட்டுக்கும் பெரிய தடையாக விளங்கும் தீய எண்ணங்களைக் கைவிட்டு விலகு, தீய சக்திகளை விட்டுவிலகு, தீய மனிதர்களை விட்டு விலகு என்று இறை வழிபாடு செம்மையாக அமைவதற்கு உதவும் வகையில் எச்சரிக்கிறார்.

**வழிபாட்டுப்பயன்**

இறைவழிபாடு நல்கும் பயனைப் புனிதவதியார் விளக்கிச் சென்றுள்ளார். பாமாலையும் பூமாலையும் சூட்டி இறைவனை வழிபாடு செய்யின் வினையென்னும் இருள் தாக்காது. நம்மை அழிக்கும் காலனை வென்றுவிட முடியும். எமபயமின்றி வாழலாம். நரகத்தில் விழுந்து துன்புறாது உய்வுபெறலாம்.

"காலனையும் வென்றோம் கடுநரகம் கை கழன்றோம்
மேலை இருவினையும் வேறறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீ அம்பெய்தார்
வரணார விந்தங்கள் சார்ந்து"5

சேரமான் பெருமாள் நாயனாரின் பொன்வண்ணத்தந்தாதியில் தோழி கூற்றுப்பாடலாக அமைந்த பாடல் செய்தி வழிபாட்டுப்பயனை நன்கு விளக்குவதாக அமைகின்றது. தலைவியிடம் தோழி இறைவனின் நாமங்களை இடைவிடாது சொல். அவனது சிறப்புகளைப் பேசு, அவன் பின்செல், அவன் அருள்வழிச் செல்லும் நல்வாழ்விற் பொருந்தியிரு. இறைவன் உனக்கு இட்டதைக் குறியாகக் கொண்டு செயல்படு என்றுரைத்தாள். இங்கு தோழி

இறையடியவர், தலைவி ஆன்மா என்று வைத்துப் பாடலின் பொருள் கொண்டால் இறையடியை அடைவதற்கான வழி கூறும் விதம் புலனாகும். இறைவனை வாழ்த்தவும், வணங்கவும் , நினைக்கவும் செய்து வழிபடுவதற்கென்றே இப்பிறவி நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**வழிபாட்டுப்பண்பு**

வழிபாட்டுக்கு அடிப்படைப்பண்பு என்ன என்பதை திருக்கழுமல மும்மணிக்கோவையில் திருவெண்காட்டடிகள் விளக்கிக்கூறியுள்ளார்.

**“ மையிருள் நிறத்து மதனுடைய அடுசினத்து**
**ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த்து அடக்கி**
**அன்புகொடு மெழுகி அருள்விளக்கு ஏற்றித்**
**துன்ப இருறைத் துரந்து முன்புறம்**
**மெய்யெனும் விதானம் வித்து நொய்ய**
**கீழ்மையில் தொடர்ந்து கிடந்த என் சிந்தைப்**
**பாழறை உனக்குப் பள்ளியறை ஆக்கிச்**
**சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு**
**எந்தை நீ இருக்க இட்டனன்.........”6**

நம்மை ஆளுமை செய்யும் ஐம்புலன்களை அடக்கியாள வேண்டும். ஐம்புலனின் அதிகாரத்தை விரட்டியடிக்க வேண்டும்.அந்த இடத்தை சுத்தி செய்யும் நோக்கோடு அன்பெனும் புனிதநீரால் மெழுகு வேண்டும். அருள் உள்ளத்தில் நிறைந்திருக்குமாறு செய்ய வேண்டும். துன்ப இருளைப்போக்கவேண்டும்.சத்தியம் என்ற நற்பண்பினால் விதானம் அமைக்க ணேடும். ஆணவம்,கன்மம்,மாயை என்று பாழடைந்துள்ள மனதினைத் தூய்மைசெய்து ஒப்பற்ற பள்ளியறையாக்க வேண்டும். பள்ளியறையின் நடுவில் இறைவன் அமரும் வகையில் தவிசு இடவேண்டும். இவ்வாறு நாம் வழிபட வேண்டிய பண்பினை அருளாளர்கள் எடுத்தியம்பியுள்ளனர்.

திருமுருகாற்றுப்படையில் வேதமகளிர், பிரம்மச்சரியம் காத்த அந்தணர்கள், சிவன் திருமால் தலைமையில் வந்த தேவர்கள், குன்றவர்கள் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் வழிபட்டுள்ளனர். எப்படியாயினும் இறையடி கண்டு தொழுதல் வேண்டுமென விருப்பம்நிறை மனதோடு ஆலயம் செல்ல வேண்டும். நீராடி உடல்தூய்மையாடும் உள்ளத்தூய்மையோடும் ஆலயம் புக வேண்டும்.இறை நாமத்தை உச்சரித்துக் கைகூப்பி, மலரிட்டு இறைவன் புகழ்பாடித் துதிக்க வேண்டும் என்று வழிபடு முறை புகலப்பட்டுள்ளது.

**துணைமை நின்றவை**

1. பட்டினத்தார் பாடல்கள் 44
2. நாவுக்கரசர், 4.076.2
3. சிவவாக்கியம் 36
4. சிவவாக்கியம் 186
5. அற்புதத்திருவந்தாதி 81
6. திருக்கழுமுல மும்மணிக்கோவை746